අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு - 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

# දේශපාලන විද්‍යාව
# POLITICAL SCIENCE
# அரசியல் விஞ்ஞானம்

**උපකාරක තක්සේරුව I-II (දෙමළ මාධ්‍යය)**
**உதவி மதிப்பீடு I-II (மொழி மூலம் தமிழ்)**
**Supportive Assessment I-II (Tamil Medium)**




**Question Paper – I-II வினாத்தாள் – I-II**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு - 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**දේශපාලන විද්‍යාව I**
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

**23 T I**

**පැය දෙකයි**
இரண்டு மணி நேரம்
Two Hours

சுட்டெண்:..........................................

**அறிவுறுத்தல்கள்:**
- இந்த வினாத்தாள் A, B என இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A ஆனது 30 பலதேர்வு வினாக்களையும், பகுதி B ஆனது 20 குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் இந்த வினாத்தாளிலேயே விடை எழுதப்பட வேண்டும்.
- ஒரு வினாவுக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 01 | |
| 2 | 02 - 07 | |
| 3 | 08 - 13 | |
| 4 | 14 - 19 | |
| 5 | 20 - 24 | |
| 6 | 25 - 30 | |
| 7 | 31 - 39 | |
| 8 | 40 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதான பரீட்சகர் | | |
| எண் கணிதப் பரீட்சகர் | | |
| பிரதான பரீட்சகர் | | |

## பகுதி A

- இலக்கம் 1 முதல் 20 வரையான வினாக்களுக்குச் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. அரசியல் என்ற எண்ணக்கரு பற்றிய சரியான புரிதல் பின்வரும் எந்தக் கருத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது?
   (1) சமூக உயர்குழாமினர் அதிகாரத்தைப் பயன்படுத்தி விளையாடும் ஒரு விளையாட்டு ஆகும்.
   (2) கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான இரு பக்கங்களைக் கொண்டது.
   (3) சமூகவியல் குடும்பத்தைச் சேர்ந்த அரசு மற்றும் அரசாங்கத்தை மையமாகக் கொண்டதொரு எண்ணக்கருவாகும்.
   (4) யார், எவ்வாறு, எந்தச் சந்தர்ப்பத்தில் அதிகாரத்தைப் பெறுகிறார்கள்? என்பதைத் தீர்மானிக்கும் செயன்முறையாகும்.
   (5) முரண்பட்ட நிலைமைகளில் தோற்றம்பெறும் மோதலில் இருந்து உருவாகும் நன்மை மற்றும் தீமைகளுக்கு இடையிலான ஓர் ஆய்வாகும்.

(......)

2. அரசியல் விஞ்ஞானம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(1) பொது நலனுக்காக அரசு, அரசாங்கம் மற்றும் மக்கள் எவ்வாறு கட்டியெழுப்பப்பட வேண்டும்? என்பது பற்றிய ஆய்வாகும்.

(2) அதிகாரப் போராட்டத்திற்குள் நடைமுறை ரீதியாக ஈடுபடும் அதேவேளை அரசியலை ஆய்வு செய்வதாகும்.

(3) தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இரு பிரதான பிரிவுகளின் ஊடாகச் செயற்படுவதாகும்.

(4) அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் செயற்படுவதும் அரசாங்க அதிகாரத்தைச் நடைமுறைப்படுத்துவதும் இதன்கீழ் அடங்கும்.

(5) அரசியல் எனப்படும் பிரதான துறையின் ஒரு உபதுறையாகும். (……)

3. அரசியல் விஞ்ஞானத்தில் அரசியல் பொருளாதார அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது,

(1) அனுபவபூர்வமான சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் அறிவை உருவாக்குதல்

(2) முழுச் சமூகத்தையும் ஒட்டுமொத்தமாகக் கருதி ஆய்வு செய்தல்

(3) அரசியலின் மேலோட்டமான வெளிப்பாடுகள் மீது மாத்திரம் அவதானத்தைச் செலுத்துதல்

(4) அரசியல் எண்ணக்கருக்களின் வரைவிலக்கணங்களை ஆழமாக ஆய்வு செய்வதற்கு உதவுதல்.

(5) சில அரசியல் தோற்றப்பாடுகளை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்தல். (……)

4. அரசாங்கத்தின் இயல்புப் பற்றி மிக சிறப்பாக விபரிக்கும் கூற்று,

(1) சமூகத்தில் உள்ள அனைவரதும் விருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முகவராகக் கருதப்படுகிறது.

(2) நிலையான ஒன்றல்ல, மாறாக அது அரச அதிகாரத்தைச் செயற்படுத்தும் பிரதிநிதியாகும்.

(3) ஜனநாயகத் தன்மையைக் கொண்டிருப்பது ஒரு கட்டாயப் பண்பாகக் கருதப்படுகிறது.

(4) ஒரு வரையறுக்கப்பட்ட ஆள்புலத்திற்குட்பட்ட மக்களின் அரசியல் சமூகமாகும்.

(5) இறைமை அதிகாரத்தின் தனி உரித்தாளராகும். (……)

5. அர்த்த ஜனாதிபதி அரசியலமைப்பு முறைமை,

(1) உலகில் முதன்முறையாக 1958 இல் பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டது.

(2) பெயரளவு மற்றும் உண்மை நிர்வாகத்துறை என்ற இரு நிர்வாகத்துறைகளின் இருப்பைக் கொண்டது.

(3) அரசாங்கத்தின் தலைவராகப் பிரதமர் கடமையாற்றுவார்.

(4) சட்டத்துறையிற்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஓர் அமைச்சரவையைக் கொண்டுள்ளது.

(5) அரசாங்க முறைமைக்குள் எவ்வகையிலும் இணைந்தொழுகும் நிலைமை ஒன்று உருவாகாது. (……)

6. ஜனாதிபதி அரசாங்க முறைமை தொடர்பாகச் சரியான கூற்று,

(1) ஜனாதிபதி நேரடி மக்கள் வாக்களிப்பின் மூலம் மாத்திரமே கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(2) சட்டத்துறையினதும் நிர்வாகத்துறையினதும் பதவிக்காலங்கள் ஒன்றுக்கொன்று இணையாக முடிவடையும்.

(3) கூட்டுப் பொறுப்புத் தத்துவம் மிகவும் சிறப்பாகப் பாதுகாக்கப்படுகிறது.

(4) அரசின் தலைவரும் அரசாங்கத் தலைவரும் தனித்தனியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

(5) கூடிய வினைத்திறனும் குறைந்த ஜனநாயகத் தன்மையும் கொண்டது. (……)

[நான்காம் பக்கம் பார்க்க]

7. மோதல் நிலைமாற்றத்திற்குள் காணக்கூடிய சிறப்பம்சம் யாதெனில்,

(1) மோதலின் வன்முறை மற்றும் அழிவுகரமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதாகும்.

(2) மோதலின் பின்னணி, கட்டமைப்பு மற்றும் எதிர்பார்க்கும் நோக்கங்களை மாற்றுவதாகும்.

(3) மோதலின் காரணிகள், இடைவெளிகள் மற்றும் இடங்களை அடையாளம் கண்டு அவை தீவிரமடைவதைக் கட்டுப்படுத்துவதாகும்.

(4) மோதல் அழிவுகரமான நிலையை நோக்கிச் செல்வதைக் கட்டுப்படுத்துவதாகும்.

(5) மோதல்கள் ஏற்படும் போது எழும் குறைகளுக்குத் தீர்வுகாண்பதாகும். (......)

8. 'அரசு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பலாத்கார அதிகாரத்தைச் சட்டபூர்வமாகப் பயன்படுத்துவதற்கான தனியுரிமை தனக்கு மாத்திரமே உண்டு எனக் கூறும் ஒரு மானிடச் சமூகமாகும்' என்று கூறிய சிந்தனையாளர் யார்?

(1) அரிஸ்டோட்டில்

(2) தோமஸ் ஹொப்ஸ்

(3) கௌடில்யர்

(4) ஜோன் லொக்

(5) மெக்ஸ் வெபர் (......)

[

9. 'பிரஜாவுரிமை' என்பதுடன் தொடர்புடைய மிகவும் சரியான கூற்று,

(1) கிரேக்க நகர அரசுகளில் இருந்த அனைவருக்கும் அது உரித்தாகியிருந்தது.

(2) அரசாங்கங்களின் தன்மைக்கு ஏற்ப பிரஜைக்குரிய அந்தஸ்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

(3) ஓர் அரசின் பலத்திற்கு பிரஜையின் பங்களிப்பு அந்தளவிற்குப் பொருத்தமானதல்ல.

(4) பிரஜாவுரிமை பற்றிய தீர்மானங்களை எடுக்கும் தனி உரிமை அரசுக்கு மாத்திரமே உண்டு.

(5) நவீன அரசுகளின் ஆட்சி முறைகள் யாவும் அனைத்துக் பிரஜைகளினதும் விருப்பின்பேரில் மேற்கொள்ளப்படுகின்றன. (......)

10. பின்வரும் அரசியல் கருத்தியல்களுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கங்களுள் ஒன்று மாத்திரமே சரியானது. சரியான விளக்கத்தைக் கொண்ட அரசியல் கருத்தியலைத் தெரிவு செய்க.

(1) சமவுடைமை மதச்சார்பின்மை வாதம் - மதம் என்பது ஒரு பிரஜையின் உரிமையாகும், அத்துடன் மதத்தின் அடிப்படையில் எந்தவொரு பிரஜையும் பாகுபாட்டிற்குள்ளாக்கப்படக் கூடாது.

(2) இனத்துவ தேசியவாதம் - 'ஒரு தேசத்திற்கு - ஒரு அரசு' என்ற சமன்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.

(3) பாசிசம் - அரசில் இருந்து வேறுப்படுத்தப்பட்ட சுதந்திரமான தனிநபர் சுதந்திரம் வலியுறுத்துகின்றது.

(4) குடியரசுவாதம் - பிரஜைகள் அரசியல் ரீதியாக செயற்றிறனாகவும் விழிப்புணர்வுடனும் இருப்பதன் மூலம் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும்.

(5) சமூக ஜனநாயகம் - ஒரு புரட்சியினூடாகச் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இதன் பிரதான நோக்கமாகும். (......)

11. சிவில் சமூக இயக்கங்கள்,

(1) மனிதர்கள் வாழும் பொது செயலெல்லைக்கும் தனியாள் செயலெல்லைக்கும் இடையிலான இடைவெளியில் செயற்படுகின்றன.

(2) அரசியல் கட்சிகளைப் போன்றே முறையான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன.

(3) ஜனநாயக ஆட்சி முறைகளில் மாத்திரமே செயற்படுகின்றன.

(4) ஒரு நாட்டின் ஜனநாயக ஆரோக்கியத்தை பலவீனப்படுத்துகின்றன.

(5) அரசியல் கட்சிகளைப் போல நேரடி அரசியல் செயற்பாட்டுத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை. (......)

12. சட்டத்தின் ஆட்சி என்ற எண்ணக்கருவினால் வலியுறுத்தப்படுவது,

(1) நபர்களைக் கைது செய்தல், சித்திரவதை செய்தல் என்பன அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

(2) அரசாங்கத்தின் மிகவும் சக்திவாய்ந்த நபர்கள் சட்டத்திற்கு மேலாகச் செயற்படுவதாகும்.

(3) மனிதர்களின் ஆட்சி அல்லாமல் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதாகும்.

(4) சட்டங்களை இயற்றுவதற்கும் சட்டங்களைச் நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரத்தை வலியுறுத்துவதாகும்.

(5) ஆட்சியாளரைத் தவிர ஆளப்படுபவர்கள் சட்டத்திற்கு இணங்க நடப்பதாகும். (......)

13. சமவுடைமைவாதம்,

(1) ஒரு கருத்தியலாக முதன்முதலில் மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸினால் முன்வைக்கப்பட்டது.

(2) பொருளாதார வளங்களின் உரிமையாளர்களாக தொழிலாளர் வர்க்கமே இருக்க வேண்டும் என பிரகடனப்படுத்துகிறது.

(3) முதலாளித்துவத்திற்கும் தாராளமயவாதத்திற்கும் ஒரு மாற்றீடாக முன்வைக்கப்பட்டது.

(4) முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளர் வர்க்கமும் இணைந்தே சோசலிசப் போராட்டத்தை நடத்த வேண்டும் எனக் கூறுகிறது.

(5) சோசலிச அரசு உருவானதன் பின்னர் அரசு நிரந்தரமாகவே இல்லாமல் போய்விடும் எனச் சுட்டிக்காட்டுகிறது. (......)

14. பின்வரும் ஐந்து நாடுகளின் அரசியலமைப்புகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கூற்றுகளுள் சரியான கூற்று,

(1) பிரித்தானியாவில் தற்போது நடைமுறையிலுள்ள அரசாங்க மாதிரி ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டகத்திலிருந்து விலகி கூட்டாட்சிச் சட்டகத்தை நோக்கி நகர்ந்துள்ளது.

(2) பிரான்சிய அரசாங்க முறைமை முழு அதிகாரமுடைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நிறுவியுள்ளதுடன் நாடாளுமன்றத்தை அதற்கு இரண்டாம் நிலைக்குத் தள்ளியுள்ளது.

(3) சுவிட்சர்லாந்து அரசாங்க முறைமையில் அரசாங்க மட்டங்களுக்கு இடையே கூட்டாக அனுபவிக்கக்கூடிய ஒத்தியங்கும் அதிகாரப் பட்டியல் நடைமுறையிலுள்ளது.

(4) இந்திய அரசியலமைப்பானது அங்கு ஒரு முழுமையான கூட்டாட்சி முறைமை நிலவுவதாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

(5) ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறைமை குடியரசுவாதக் கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி நேரடி மக்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார். (......)

15. சுவிட்சர்லாந்து அரசாங்க முறைமை,

(1) “கூட்டு ஆட்சி“ என்ற தத்துவத்திற்கு ஏற்ப ஏனைய கன்டன்களுக்கு நிகரான அந்தஸ்து அரை கன்டன்களுக்கும் உண்டு.

(2) கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் கன்டன்களுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு கன்டன் அரசாங்கங்களுக்குரிய அதிகாரங்களைக் காட்டுவதன் மூலம் செய்யப்பட்டுள்ளது.

(3) கன்டன்களுக்குரிய அரசியலமைப்புகளைத் தயாரிப்பது கன்டன்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(4) மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் மாநிலச் செயற்பாடுகளுக்காகத் தனித்தனியாக நிறுவப்பட்ட இரட்டை நீதிமன்ற முறைமை உண்டு.

(5) கூட்டாட்சி உச்ச நீதிமன்றத்திற்கு கூட்டாட்சி அரசாங்கம் விதிக்கும் சட்டங்களின் அரசியலமைப்புத் தன்மையை ஆராயும் அதிகாரம் உண்டு. (......)

16. அரசுக்களுக்கிடையிலான பிராந்திய அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

(1) ஆசியான் அமைப்பு

(2) சர்வதேச நாணய நிதியம்

(3) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

(4) சர்வதேச மன்னிப்புச் சபை

(5) மனித உரிமைகள் கண்காணிப்பகம் (......)

17. 1947 சோல்பரி அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட செனட் சபையை (மூதவை) ஒழித்த அரசாங்கம்

(1) 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜன எக்சத் பெரமுன) அரசாங்கம்

(2) 1960 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான இலங்கை சுதந்திரக் கட்சி அரசாங்கம்

(3) 1965 இல் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்

(4) 1970 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம்

(5) 1977 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் (......)

18. அரச கொள்கை மற்றும் சட்டத்துறையின் பங்கு தொடர்பாகச் பொருத்தமானது,

(1) நிர்வாகத்துறையின் தலைமைத்துவத்திற்கு உட்பட்டு, எனினும் சுயாதீனமாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் உரிய அதிகாரப்பூர்வ நிறுவனமாகும்.

(2) கொள்கைகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகளுக்கான மீளாய்வை வழங்குவதாகும்.

(3) பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும் நிறுவனமாகும்.

(4) கொள்கை ஆலோசனைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

(5) அரச கொள்கைகளின் உண்மையான ஆரம்பப் பணியைச் செய்து, அதில் முதன்மையானதாகச் செயற்படுவதாகும். (......)

19. அரசு தனது தேசிய அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்காகப் பலாத்கார அதிகாரத்தைப் பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாவது,

(1) பிரச்சாரம்

(2) கூட்டணியமைத்தல்

(3) ஆக்கிரமிப்புகள்

(4) உடன்படிக்கை செய்தல்

(5) கடன்கள் மற்றும் மானியங்களை வழங்குதல் (......)

20. சர்வதேச அரசியல்,

(1) அரசுகள் தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றப் பயன்படுத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறை இராணுவ அதிகாரமாகும்.

(2) தொடர்ச்சியாக நிலவும் அராஜகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உலகளாவிய மட்டத்திலான அரசாங்கம் ஒன்றின் செயற்பாடு காணப்படுவதாகும்.

(3) பொதுவான ஒரு சட்ட முறைமையின் செயற்பாடு காணப்படுவதால் ஒவ்வொரு அரசினதும் அமைதி மற்றும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாகும்.

(4) உலகமயமாதல் மற்றும் உலகளாவிய போக்குகள் போன்ற நிலைமைகளின் கீழ் ஒரு இயங்குநிலை தோற்றப்பாடாக மாறியுள்ளதாகும்.

(5) உலக அமைதியின் மத்தியஸ்தராக ஐக்கிய அமெரிக்காவுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்குவதாகும்.

(......)

- 21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூற்றுகளுள் **சரியான கூற்றுத்தொகுதியினை** கொண்ட விடையினை தெரிவு செய்க.

21. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் காலனித்துவ சமூக மாற்றங்களாவன:

A - முதலாளி மற்றும் தொழிலாளி எனச் சமூக வர்க்கப் பாகுபாடு ஏற்படுதல்.
B - மேல்நோக்கிய சமூக அசைவியக்கம் ஏற்படுதல்.
C - குழுவாதத்திற்குப் பதிலாக தனியாள்வாதத்தைப் போற்றும் சமூக உறவுகள் வளர்ச்சியடைதல்.
D - இந்நாட்டுச் சமூகம் குறுகிய இனவாதத்துடன் செயற்படத் தூண்டப்படுதல்.
E - மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சிக்குத் தேவையான அடித்தளம் இடப்படல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

22. 1931 டொனமூர் அரசாங்க முறையின் கீழ் ஆளுநரின் அதிகாரத்தினால் அரசாங்க சபையின் (அரசக் கழகத்தின்) அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்ட வடிவங்களாவன,

A - இலங்கை தொடர்பாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டங்களை இயற்ற பிரித்தானிய பேரரசிற்கு முடிந்தமை.
B - எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்க சபையைக் கலைக்க ஆளுநருக்கு முடிந்தமை.
C – அரசாங்க சபையின் அனுமதியின்றிச் சட்டங்களை இயற்ற ஆளுநருக்கு முடிந்தமை.
D – அரசாங்க சபை நிறைவேற்றும் ஒவ்வொரு சட்டமூலத்திற்கும் ஆளுநரின் அனுமதி அத்தியாவசியமாக இருந்தமை.
E - ஆளுநரின் அதிகாரங்கள் தொடர்பான சில விடயங்களை விவாதிக்க அரசாங்க சபைக்கு முடியாமல் இருந்தமை.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

23. 1947 சோல்பரி அரசியலமைப்பு,

A - பாராளுமன்றத்தை சட்ட ரீதியாக இறையாண்மைமிக்கதாக மாற்றியது.
B - இலங்கையை ஒரு பல்லின மற்றும் பல்மதச் சமூகம் என்பதை ஏற்றுக்கொண்டது.
C - சுயாதீன நீதிச்சேவை மற்றும் பொதுச் சேவை என்பவற்றை நிறுவியது.
D - சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவத்தை வழங்கும் நோக்கில் பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதிகளை உருவாக்கியது.
E - சட்டத்துறையினுள் ஈரவைவாதம் ஏற்றுக் கொண்டது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

24. 1972 முதலாவது குடியரசு அரசியலமைப்பு,

A - ஒற்றையாட்சி முறைமையை ஏற்றுக்கொண்டது.
B - அரசுக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பிற்கு அரசியலமைப்பு ரீதியான அடித்தளத்தை வழங்கியது.
C - சட்டமூலமொன்றின் அரசியலமைப்புத் தன்மையைப் பரிசோதிப்பதற்காக அரசியலமைப்பு நீதிமன்றம் நிறுவியது.
D - சட்டத்துறை நிறைவேற்றும் சட்டமூலங்களுக்கான இறுதி அனுமதி வழங்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியது.
E - பொதுச் சேவையின் செயற்பாடுகள் பற்றிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை அமைச்சரவைக்கு வழங்கியது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

25. மாகாண சபை முறைமை தொடர்பாகச் சரியான சேர்மானங்கள்,

A - இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நேரடி விளைவாக நிறுவப்பட்டது.

B - நிர்வாக அதிகாரம் மற்றும் மத்திய அரசுக்குரிய சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை அதிகாரங்களின் குறிப்பிட்ட அளவுகள் இதன் மூலம் பரவலாக்கப்பட்டுள்ளன.

C - ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதியாவார்.

D - இதன் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும்.

E - மாகாண சபையொன்றில் வெற்றிபெறும் கட்சி அல்லது குழுவிற்கு இரண்டு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படுகின்றன.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

- 26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுடனும் தரப்பட்டுள்ள கூற்று இணைக்கு மிகவும் பொருத்தமான தெரிவு பின்வரும் அட்டவணையில் உள்ள (1), (2), (3), (4), (5) ஆகியவற்றில் எதுவெனத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கிறது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 26. | 1978 அரசியலமைப்பின் கீழ் சபாநாயகர் பாராளுமன்றத்தில் பொதுவாக வாக்கினை பயன்படுத்துவதில்லை, எனினும் வாக்குகள் சமநிலையாகும் போது தீர்மானிக்கும் வாக்கைப் பயன்படுத்துவார். | பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்படும் சட்டமூலங்களுக்கான இறுதி அனுமதியை ஜனாதிபதி வழங்குவார். | (....) |
| 27. | 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் படி பிரதமரைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. | இதன் கீழ் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியுமானது நாடாளுமன்றத்திற்கு இரண்டரை ஆண்டுகள் கடந்த பின்னரேயாகும். | (....) |
| 28. | 1978 அரசியலமைப்பின் 75 ஆவது பிரிவின் படி கடந்த காலத்தை உள்ளடக்கும் வகையிலான சட்டங்களை இயற்றும் ஆற்றல் பாராளுமன்றத்திற்கு உண்டு. | பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் அரசியலமைப்புத் தன்மையைப் பரிசோதிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. | (....) |
| 29. | இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளவும், அங்கு வாக்களிக்கவும் அதிகாரம் உண்டு. | 1978 அரசியலமைப்பின் படி சட்டத்தினால் நிறுவப்பட்ட மிக உயர்ந்த முதல்நிலை நீதிமன்றம் மேல் நீதிமன்றமாகும். | (....) |
| 30. | 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. | ஜனாதிபதியிடம் அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் ஒப்படைத்து, அவ்வதிகாரங் களைச் சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான சூழலை உருவாக்குவதே 1978 அரசியலமைப்பின் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | (....) |

## பகுதி - B

31. கிரேக்க நகர அரசுகளில் செயற்பாட்டிலிருந்த அரசாங்க முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

32. கெனன் நியூட்டன் மற்றும் ஜோன்மென்டஸ் ஆகியோர் அரசியலை ஒப்பீட்டு ரீதியாக ஏன் கற்க வேண்டும்? என்பதற்கான இரண்டு காரணங்களை முன்வைத்துள்ளனர். **அவ்விரு** காரணங்களையும் குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

33. பின்வரும் கருத்துருக்களை முன்வைத்த அரசியல் சிந்தனையாளர்கள் **இருவரையும்** பெயரிடுக.

(1) செயற்பாட்டுப்பிரஜை - ...........................................................................................................

(2) சிவில் வாழ்க்கை - ...............................................................................................................

34. பாராளுமன்ற அரசாங்க முறைமையொன்றில் உண்மை நிர்வாகத்துறையை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் பதவியிலிருந்து நீக்கக்கூடிய **இரண்டு** வழிகளைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

35. ஓர் அரசாங்கத்தை, ஒரு "ஆட்சி முறை" (Regime) என அழைப்பதற்குக் காரணமாக அமையும் **இரண்டு** சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

36. மூன்றாம் உலக சோசலிசம் (Third-World Socialism) என்ற சிந்தனை கட்டியெழுப்பப்படுவதற்குப் பங்களிப்புச் வழங்கிய **இரண்டு** அரசியல் தலைவர்களைப் பெயரிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

37. பின்வரும் பண்புகளைக் கொண்ட அரசு மாதிரிகளைப் பெயரிடுக.

(1) ஆட்சியாளருக்குச் சட்டபூர்வத்தன்மை சம்பிரதாய அடிப்படையில் கிடைக்கப்பெறுவது:

......................................................................................................................................

(2) ஆட்சியாளருக்கு அரசியல் அதிகாரம் சிரேஷ்ட தன்மையின் அடிப்படையில் கிடைக்கப்பெறுவது:

......................................................................................................................................

38. நல்லிணக்கம் மூன்று மட்டங்களில் ஏற்படுகிறது. அவற்றுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

39. (1) காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இந்நாட்டிற்குப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துவது தொடர்பாக முக்கியத்துவம் பெறும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

.....................................................................................................................................

(2) பொறுப்புவாய்ந்த அரசாங்க முறைமையொன்று இந்நாட்டில் உருவாவதற்குப் பங்களிப்புச் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

.....................................................................................................................................

40. தற்போதைய இலங்கை அரசாங்க முறைமையிலுள்ள ஜனநாயகமற்ற **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக.

(1) .....................................................................................................................................

(2) .....................................................................................................................................

41. (1) 1931 டொனமூர் அரசாங்க முறையின் கீழ் அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்டுபவர் யார்?

.....................................................................................................................................

(2) 1931 டொனமூர் அரசாங்க முறையின் கீழ் அமைச்சரவையின் உப தலைவருக்கு அரசாங்க சபையில் கிடைத்த பதவி யாது?

.....................................................................................................................................

42. இந்நாட்டின் முதலாவது (1946) எல்லை நிர்ணயக் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(1) .....................................................................................................................................

(2) .....................................................................................................................................

43. பின்வரும் கூற்றுகளினால் விவரிக்கப்படும் அரசியல் எண்ணக்கருவை பெயரிடுக.

(1) அரசாங்க அதிகாரம் ஒரு நபரிடமோ அல்லது ஒரு நிறுவனத்திடமோ குவிக்கப்படுவதைத் தடுத்தல்:

.....................................................................................................................................

(2) அரசாங்கத்தின் துறைகளுக்குள் அரச அதிகாரம் கொடுங்கோன்மை மிக்கதாகக் குவிக்கப்படுவதைத் தடுத்தல்:

.....................................................................................................................................

44. பொதுக் கொள்கையுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(1) .....................................................................................................................................

(2) .....................................................................................................................................

45. பிரான்சிய சட்டத்துறை இரு அவைகளைக் கொண்டது. **அவ்விரு** அவைகளையும் பெயரிடுக.

(1).....................................................................................................................................

(2).....................................................................................................................................

46. 1978 இரண்டாவது குடியரசு அரசியல்யாப்பில் சட்ட அதிகாரத்தைச் செயற்படுத்துவது இரு தரப்புகளிடம் காணப்பட்டது. **அவ்விரு** தரப்புகளையும் பெயரிடுக.

(1) .....................................................................................................................................

(2) .....................................................................................................................................

47. 1978 அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட மாகாண சபை முறைமையில் நிர்வாகத்துறை **இரண்டு** பிரதான பகுதிகளைக் கொண்டது. அவற்றைப் பெயரிடுக.

(1)......................................................................................................................................

(2)......................................................................................................................................

48. இலங்கை அரசியலில் செயற்பாட்டிலிருந்த ஆரம்பகால அரசியல் இயக்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(1)......................................................................................................................................

(2)......................................................................................................................................

49. 1972 முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் காணப்பட்ட **இரண்டு** பலவீனங்களைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................................................

(2) ......................................................................................................................................

50. 2009 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கு அதிகரித்ததன் மத்தியில் உருவாக்கப்பட்ட “BRICS“ அமைப்பின் **இரண்டு** உறுப்பு நாடுகளைப் பெயரிடுக.

(1)......................................................................................................................................

(2)......................................................................................................................................

***

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு - 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**දේශපාලන විද්‍යාව II**
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

**23 T II**

**පැය තුනයි**
மூன்று மணித்தியாலம்
Three hours

**අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10**
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

மேலதிக வாசிப்பு நேரத்தை வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடைகளை எழுதும் போது முன்னுரிமை அளிக்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் பயன்படுத்துக

**அறிவுறுத்தல்கள்:**

இந்த வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவும், பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களும், பகுதி III இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவும் உள்ளடங்குமாறு ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. மனிதன் அரசியலைப் விளங்கிக்கொள்ளும் விதங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

2. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டைச்** சுருக்கமாகக் கலந்துரையாடுக.
   (i) நவதாராளவாத அரசு
   (ii) பின்-காலனித்துவ அரசு
   (iii) சமூக ஒப்பந்தக் கோட்பாடு
   (iv) குடியரசுவாதம் (புள்ளிகள் 10x2=20)

3. பின்வரும் அரசாங்க முறைகளில் எவையேனும் இரண்டின் பண்புகளைக் கலந்துரையாடுக.
   (i) ஒற்றையாட்சி அரசாங்க முறை
   (ii) கூட்டாட்சி அரசாங்க முறை
   (iii) கூட்டுச் சமஸ்டி அரசாங்க முறை (புள்ளிகள் 10x2=20)

[இரண்டாம் பக்கம் பார்க்க]

## பகுதி II

4. "1833 கோல்புறூக் கமரன் சீரத்திருத்தமானது பழைய யுகத்தின் முடிவையும் புதிய யுகத்தின் ஆரம்பத்தையும் குறித்து நிற்கின்றது". கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

5. 1931 டொனமூர் அரசாங்க முறையின் பின்வரும் முன்மொழிவுகளில் எவையேனும் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக.

 (i) சர்வஜன வாக்குரிமை

 (ii) அரசாங்க சபை (அரசுக்கழகம்)

 (iii) அமைச்சரவை (புள்ளிகள் 10x2=20)

6. (i) வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க மாதிரியில் காணப்படும் **ஐந்து** பண்புகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

 (ii) 1947 சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் 1972 முதலாவது குடியரசு அரசியல் யாப்புகளின் கீழ் பொதுச் சேவையின் செயற்பாட்டை ஒப்பீட்டு ரீதியாகக் கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

7. 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டைக்** கலந்துரையாடுக.

 (i) ஜனாதிபதியும் நீதித்துறையும்

 (ii) அடிப்படை உரிமைகள்

 (iii) பாராளுமன்றம்

 (iv) 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்

## பகுதி III

8. (i) பிரான்சின் ஐந்தாவது குடியரசு அரசியல் யாப்பில் காணப்படும் **ஐந்து** பண்புகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

 (ii) இந்திய அரசியல் யாப்பு முறைமையில் காணப்படும் ஒற்றையாட்சிப் பண்புகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

9. ஜனநாயக ஆட்சிமுறை தொடர்பாக இலங்கையின் அனுபவங்களை விவரிக்குக. (20 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டைப்** பற்றி சிறு குறிப்பு எழுதுக.

 (i) தேசிய அதிகாரமும் தேசிய அபிலாஷைகளும்

 (ii) பொதுக்கொள்கையும் நீதித்துறையும்

 (iii) இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகாலப் போக்குகள்

 (iv) அமுக்கக் குழுக்கள்

 (v) மத்தியஸ்தம் (புள்ளிகள் 10x2=20)